Nestlé Good food, Good life

# பத்திரிகை வெளியீடு

கொழும்பு, செப்டெம்பர் 14, 2021

**உள்நாட்டு திறமைசாலிகளின் புத்தாக்கங்களுக்கு கைகொடுத்தல்: Nestlé Connect University Innovation Challenge மூலமாக ஊட்டச்சத்து மற்றும் நிலைபேண்தகமை தொடர்பான சிந்தனைகளுக்காக மூன்று அணிகளுக்கு வெற்றி விருதுகள்**

உள்நாட்டு திறமைசாலிகளின் புத்தாக்கங்கள் மீது மிகுந்த கவனம் செலுத்தி வருகின்ற நெஸ்லே நிறுவனம், அதன் ஒரு பகுதியாக தனது Nestlé Connect University Innovation Challenge மூலமாக ஊட்டச்சத்து மற்றும் நிலைபேண்தகமை தொடர்பான சிந்தனைகளுக்காக 200 போட்டியாளர்கள் மத்தியிலிருந்து மூன்று பட்டதாரி மாணவர்கள் அணிகளுக்கு விருதுகளை வழங்கியுள்ளது. ஊட்டச்சத்து மற்றும் நிலைபேண்தகமை ஆகிய இரு அம்சங்களிலும் புத்தாக்கமான வழியில் சிந்திக்கும் திறனை ஊக்குவித்து, ஆதரிக்கும் நோக்குடன் களனி, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர, கொழும்பு மற்றும் மொரட்டுவை ஆகிய நான்கு பல்கலைக்கழகங்களிலுள்ள பட்டதாரி மாணவர்களுக்காக 2020 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இப்போட்டி ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தருஷி மந்துலிகா, இஷானிகா செனவிரத்ன மற்றும் விந்துல பெரேரா ஆகியோர் முதலிடத்தைப் பெற்றுள்ளதுடன், ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த முகமது ஷாகிப், வாகீஷ் ராஜபக்ச மற்றும் இசுரு உதயங்க ஆகியோர் இரண்டாவது இடத்தைப் பெற்றனர். கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பிமாலி பாக்யா, மிஷேல் விஜேசூரிய மற்றும் தினேந்திரிகா செவ்வந்தி ஆகியோர் மூன்றாம் இடத்தைப் பிடித்தனர்.

*“எங்கள் உள்நாட்டு இளம் திறமைசாலிகளுடன் இடைத்தொடர்பாடல்களை மேற்கொண்டு, எதிர்காலத்திற்கான அவர்களின் எண்ணங்களையும், சிந்தனைகளையும் செவிமடுப்பது உண்மையில் மட்டற்ற மகிழ்ச்சியளிப்பதுடன், ஒரு பெரும் பாக்கியமாகும். இலங்கையில் பல இயற்கை வளங்கள் காணப்படுவதுடன் மற்றும் ஆற்றல்மிக்க இளம் சிந்தனையாளர்கள் உள்ளனர். மேலும் எங்கள் Nestlé Needs YOUth நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஏற்ப, அவர்கள் தங்கள் முழுமையான ஆற்றலை வெளிக்கொணரவும், நாட்டிற்கு அர்த்தமுள்ள பங்களிப்புகளை வழங்கவும் அவர்களுக்கு தேவையான வாய்ப்புகள் வழங்கப்படுவதை நாம் உறுதி செய்ய விரும்புகிறோம். ஆழமான நுண்ணறிவு மற்றும் பொருத்தமான புத்தாக்கங்கள் மூலம், கடந்த 115 ஆண்டுகளில் இலங்கையில் நாம் ஏற்படுத்திய நேர்மறையான பலாபலன்களை மேலும் உச்சப்படுத்தும் எங்கள் பேராவலையும் இந்தப் போட்டி ஆதரிக்கிறது. நாங்கள் உள்நாட்டு மூலப்பொருட்களை கூடுதலான அளவில் பயன்படுத்த விரும்புகிறோம். அவை இன்னும் கூடுதலான அளவில் ஊட்டச்சத்தைக் கொண்டவையாக மட்டுமன்றி, நிலைபேண்தகமை கொண்டவையாகவும் இருக்கும் வழியில் வழங்க விரும்புகிறோம். அனைத்து இலங்கையர்களுக்கும் நன்மை பயக்கும் தீர்வுகளுக்காக உள்நாட்டுச் சமூகத்துடன் நெருக்கமாக பணியாற்றுவதன் மூலம் மட்டுமே நிலைபேறான நேர்மறையான பலாபலன்களை எங்களால் கொண்டு வர முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். எதிர்காலத்தில் இது போன்ற பல இடைத்தொடர்பாடல்களை முன்னெடுப்பதில் நாங்கள் ஆவலாக உள்ளோம்,”* என்று நெஸ்லே நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஃபேப்ரிஸ் காவலின் அவர்கள் கூறினார்.

இதில் பங்கேற்றுள்ள அனைத்து அணிகளும் உள்நாட்டு மூலப்பொருட்களைப் பயன்படுத்தும் ஊட்டச்சத்து நிரம்பிய தயாரிப்புக்களுக்கான சிந்தனைகள் மற்றும் நிறுவனத்தின் சுற்றுச்சூழல் நிலைபேண்தகமையை மேம்படுத்தும் முயற்சிகள் தொடர்பில் ஒன்றிணைந்து சிந்தனைகளை வெளிக்கொண்டு வருவதற்கு இடமளிக்கப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டம் அவர்களுக்கு நிபுணர்கள் மற்றும் வழிகாட்டிகளுடன் போட்டியாளர்கள் தங்கள் சிந்தனைகளை கருத்தியல் வடிவத்திலிருந்து மாதிரி வடிவத்திற்கு எடுத்துச் செல்லவும், வடிவமைப்பு சிந்தனை மற்றும் விரைதிறன் கொண்ட வழிமுறைகளைப் பயன்படுத்தவும் உதவியுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு மேலதிகமாக, நெஸ்லே லங்கா நிறுவனம் உள்நாட்டு வணிக தொடக்கங்கள் மற்றும் தொழில்முயற்சியாளர்களுடன் ஊட்டச்சத்து மற்றும் நிலைபேண்தகமை ஆகிய துறைகளில் இதே போன்ற புத்தாக்க நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கணினி தொழில்நுட்ப நிரலோட்ட நிகழ்வுகளையும் (hackathon) முன்னெடுத்து வருகிறது. இலங்கையில் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்தும் செயற்திட்டங்களை ஆரம்பிக்க, உலகின் மிகப்பெரிய உணவு மற்றும் பான வகை தயாரிப்பு நிறுவனமாக அதன் பரிமாணம் மற்றும் நிபுணத்துவத்துடன் வெளிப்புற புத்தாக்குனர்களின் நுண்ணறிவு மற்றும் அறிவாற்றலை இணைப்பதை நிறுவனம் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.